முழுப்பதிப்புரிமையுடையது

அந்தரங்கமானது

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த. (சாதாரண தர)ப் பரீட்சை - 2023 (2024)

## 33 - வரலாறு

### புள்ளியிடும் திட்டம்



இந்த விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்துக்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக்கொள்ளும் கருத்துக்களுக்கிணங்க, இதில் உள்ள சில விடயங்கள் மாறலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன.

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
## க.பொ.த. (சாதாரண தர)ப் பரீட்சை - 2023(2024)
## 33 - வரலாறு

**வரலாறு** I 01 x 40 = 40 புள்ளிகள்

---

**வரலாறு** II

1 ஆம் வினா கட்டாயமானது

அ. I 18

ஆ. II 12 = 30 புள்ளிகள்

**பகுதி** II

| | | |
|---|---|---|
| வினா இலக்கம் 2 | = | 18 புள்ளிகள் |
| வினா இலக்கம் 3 | = | 18 புள்ளிகள் |
| வினா இலக்கம் 4 | = | 18 புள்ளிகள் |
| வினா இலக்கம் 5 | = | 18 புள்ளிகள் |
| வினா இலக்கம் 6 | = | 18 புள்ளிகள் |
| வினா இலக்கம் 7 | = | 18 புள்ளிகள் |

ஏதாவது 4 வினாக்களுக்கு
4 x 18 = 72 புள்ளிகள்

**பகுதி** III

| | | |
|---|---|---|
| வினா இலக்கம் 8 | = | 18 புள்ளிகள் |
| வினா இலக்கம் 9 | = | 18 புள்ளிகள் |

ஏதாவது ஒரு வினாவிற்கு
1 x 18 = 18 புள்ளிகள்

**120 புள்ளிகள்**

**இறுதிப் புள்ளியைக் கணித்தல்**

**முழு விடைத்தாளுக்குமான இறுதிப்புள்ளியை, புள்ளி வழங்கும் குழு தீர்மானிக்க முடியாது**

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

අ.පො.ස (සා.පෙළ) විභාගය / க.பொ.த. (சாதாரண தர)ப் பரீட்சை - 2023 (2024)

විෂය අංකය / பாட இலக்கம்: **33**

විෂයය / பாடம்: **வரலாறு**

## ලකුණු දීමේ පටිපාටිය / புள்ளி வழங்கும் திட்டம்
## I පත්‍රය / பத்திரம் I

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 2 | 11. | 2 | 21. | 4 | 31. | 3 |
| 02. | 1 | 12. | 3 | 22. | 4 | 32. | 1 |
| 03. | 4 | 13. | 2 | 23. | 2 | 33. | 4 |
| 04. | 1 | 14. | 4 | 24. | 1 | 34. | 1 |
| 05. | 2 | 15. | 3 | 25. | 3 | 35. | 3 |
| 06. | 1 | 16. | 3 | 26. | 3 | 36. | 3 |
| 07. | 2 | 17. | 2 | 27. | 2 | 37. | 3 |
| 08. | 4 | 18. | 1 | 28. | 1 | 38. | 1 |
| 09. | 3 | 19. | 2 | 29. | 1 | 39. | 3 |
| 10. | 1 | 20. | 4 | 30. | 3 | 40. | 2 |

✪ විශේෂ උපදෙස් / விசேட அறிவுறுத்தல் :

එක් පිළිතුරකට / ஒரு சரியான விடைக்கு 01 ලකුණු බැගින් / புள்ளி வீதம்

මුළු ලකුණු / மொத்தப் புள்ளிகள் 1 x 40 = 40

OL/2023(2024)/33/T-II

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**33 T II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2023(2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2023(2024)
**General Certificate of Education (Ord. Level) Examination, 2023(2024)**

ඉතිහාසය II
வரலாறு II
History II

1. (அ) (i) சுட்டெண் ............................




[மறுபக்கம் பார்க்க


பெரியபிரித்தானியா
இத்தாலி
கருங்கடல்
டோக்கியோ
கல்கத்தா
ஜவாதீவு
N

1. அ.

(i) இடம் குறித்தல் 1 × 12 = 12 புள்ளிகள்

(ii) இடம் குறித்தல் 1 × 6 = 06 புள்ளிகள்

ஆ.

(i) A - குளோடியஸ் தொலமி / தொலமி

B - கீர்த்தி ஶ்ரீ நிசங்கமல்லன் / நிசங்கமல்லன்

C - அலெக்ஸ்சாண்டர் கிரஹம் பெல் / கிரஹம் பெல்

D - D.S சேனானாயக்க

**(01 X 4 = 04 புள்ளிகள்)**

(ii) 1. தொலைக்காட்டி/ தொலைநோக்கி

2. விண்வெளி ஆராய்ச்சி/ வானியல் ஆராய்ச்சி / தூரத்தை அவதானித்தல் / வானிலுள்ள பொருட்களை அவதானித்தல்

3. கலிலியோ கலிலி / கலிலி

4. இத்தாலி

**(01 X 4 = 04 புள்ளிகள்)**

(iii) 1. சேர். ஹென்றி ஸ்டீல் ஒல்கொட் / ஒல்கொட்/ ஹென்றி ஒல்கொட்

2. பாணந்துறை விவாதம்/பாணந்துறை

3. பௌத்தம் பிரம்ம ஞான சங்கம் / பரம்ம விஞ்ஞானார்த்த சங்கம்

4. கொழும்பு ஆனந்தக் கல்லூரி

கண்டி தர்மராஜ கல்லூரி

காலி மஹிந்த கல்லூரி

மாத்தளை விஜய கல்லூரி

கம்பளை ஜினராஜ வித்தியாலாயம்

நாவலப்பிட்டி அநுருத்த வித்தியாலயம்

**(ஒரு பாடசாலை எழுதினால் 01 புள்ளி)**

**(01 X 4 = 04 புள்ளிகள்)**

## பகுதி II

**02. தேர்ச்சி மட்டம்**

- இலங்கையின் வரலாற்று மூலாதாரங்கள் தொடர்பான விடயங்களையும் இலக்கிய மூலாதாரங்களை பயன்படுத்தும் போது அவதானிக்கப்பட வேண்டிய விடயங்களையும் வரலாற்றைக் கற்பதன் முக்கியத்துவத்தையும் முன்வைப்பர்

### பகுதி II

**2.** (i) இலங்கைக்கு வந்து இந்நாடு பற்றிய தகவல்களை எழுதிய மூன்று வெளிநாட்டவரின் பெயர் எழுதுக. (03 புள்ளிகள்)

(ii) வரலாற்றைக் கட்டியெழுப்புவதற்கு இலக்கிய மூலாதாரத்தைப் பயன்படுத்தும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய இரண்டு விடயங்களைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) தொல்பொருள்கள் அழிவடைவதில் செல்வாக்குச் செலுத்தும் இரண்டு மனித நடவடிக்கைகளை விவரிக்குக. (05 புள்ளிகள்)

(iv) வரலாற்றைக் கற்பதன் முக்கியத்துவத்தை மூன்று விடயங்கள் கொண்டு விளக்குக. (06 புள்ளிகள்)

(i)
- பாகியன் தேரர்
- இபின்பதுதா
- ரிபைரோ
- பிலிப்ஸ் பல்டியஸ் / பிலிப்ஸ் பொல் தெவுஸ் / பல்டியஸ்
- றொபட்நொக்ஸ் /நொக்ஸ்

**(01 X 3 = 03 புள்ளிகள்)**

(ii)
- நூல் எழுதப்பட்ட காலம்
- நூல் ஆசிரியர்
- நூல் ஆசிரியரின் நோக்கம்
- நூலுக்கான தகவல் திரட்டப்பட்ட விதம்

**(02 X 2 = 04 புள்ளிகள்)**

(iii)
- பெருந்தெருக்கள் அமைக்கப்படுதல்
- வேகமான நகரமயமாக்கலால் கட்டடங்கள் நிர்மாணிக்கப்பட்டமை
- விவசாய நடவடிக்கைகளுக்காக நிலத்தைப் பயன்படுத்துதல்
- தொல் பொருட்களைத் திருடி விற்றல்
- பெறுமதியான பொருட்கள் புதைந்திருக்கலாம் என்ற நம்பிக்கையில் அகழ்வினை மேற்கொள்ளல்
- தொல் பொருட்களின் மீது எழுதுதல் - சித்திரம் வரைதல், கீறுதல், தொடுதல் மூலம் சேதமடைதல்.

**(02 + 03 = 05 புள்ளிகள்)**

(iv)
- பிரச்சினைகளுக்கு ஆக்கபூர்வமான தீர்வினை எடுத்தல்.
- நூல்களை வாசிக்க தூண்டப்படுதல்.
- ஆளுமை வளர்ச்சியடைதல்.
- விமர்சன ரீதியான சிந்தனை வளர்ச்சியடைதல்.
- தான் வாழும் சமூகம், மற்றும் உலகம் பற்றிய புரிந்துணர்வைப் பெறுதல்.
- இறந்தகால அனுபவங்களின் மூலம் நிகழ்காலத்தைப் புரிந்து எதிர்காலத்தைத் சிறப்பாக்குதல்.
- நாட்டின் தேசிய தனித்துவத்தை அறிந்து கொள்ளுதல்.
- மனிதத் தன்மையை மதிப்பதன் மூலம் தேசிய ஒற்றுமையை ஏற்படுத்துதல்.
- மாற்றுக் கலாசாரத்தை மதித்தல்.
- வேறுப்பட்ட கருத்துக்களை சகித்துக் கொள்ளுதல்

**(03 + 03 = 06 புள்ளிகள்)**

**03. தேர்ச்சி மட்டம்**

- இலங்கையின் குடியேற்றங்களில் வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதன் வாழ்ந்த குகைகள், முன் வரலாற்று கால மயானங்கள், வாழ்க்கைக்கோல பண்புகள் ஆரம்ப வரலாற்றுக்கால பகுதி குடியிருப்புகள் முன் வரலாற்று காலத்தில் இருந்து வேறுபடும் விதங்களைக் கூறுவர்.

**3.** (i) வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் மனிதன் வசித்து வந்த மூன்று கற்குகைகளின் பெயர் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(ii) முன்வரலாற்றுக் காலப்பகுதி மயானங்கள் கண்டுபிடிக்கப்பட்ட நான்கு இடங்களின் பெயர் தருக. (04 புள்ளிகள்)

(iii) முன்வரலாற்றுக் காலப்பகுதி மனிதனின் இரண்டு வாழ்க்கைக் கோலப் பண்புகளை விவரிக்குக. (05 புள்ளிகள்)

(iv) ஆரம்ப வரலாற்றுக் காலப்பகுதிக் குடியிருப்புகள் முன்வரலாற்றுக் காலப் பகுதியிலிருந்து வேறுபடும் முறையினை மூன்று விடயங்கள் கொண்டு விளக்குக. (06 புள்ளிகள்)

(i) பாகியன்கல, குருவிட்டபட்டதொம்பலென, கித்துள்கல பெலிலென, சீசிரிய பொத்தான, சீகிரிய, அலிகல , இராவண எல்ல , பிதுரங்கல ,அத்தன கொட அலுலென.

**(01 X 3 = 03 புள்ளிகள்)**

(ii) கல்சொஹன், யட்டிகல்பொத்த, இப்பன்கட்டுவ, பெரகல, ரஞ்சாமடம, ஹல்துமுல்ல, நிகவலமுல்ல, கலவொட்டுவாவ, பொம்பரிப்பு, பண்டத்தர , ஹபரத்தாவ, தும்மல சூரிய, வொவானிவல

**(01 X 4 = 04 புள்ளிகள்)**

(iii)
- நிலையான குடியிருப்பு அமைத்தல்.
- விவசாயமும் வேட்டையாடலும்
- இரும்பு உலோகப்பாவனையும் கல்லாயுதப் பாவனையும்.
- வனைதல் சில்லைப்பயன்படுத்தி மட்பாண்டங்களைச் செய்தல்.
- பெண்கள் தம்மை அலங்கரித்துக்கொள்வதில் ஈடுபடல்
- முறையான மரணச்சடங்கைப் பின்பற்றுதல்

**(02 + 03 = 05 புள்ளிகள்)**

(iv)
- குளங்களை மையமாகக் கொண்டு குடியிருப்புக்களை அமைத்தமை (வாபிகாம........)
- ஆற்றுப்பள்ளத்தாக்குகளுக்கு அப்பால் குடியிருப்புக்கள் அமைத்தமை.
- தொழில் ரீதியான கிராமங்கள் அமைக்கப்பட்டமை.
- செயற்பாட்டு ரீதியிலான குடியிருப்புக்கள் அமைக்கப்பட்டமை.
- சிறிய, நடுத்தர, நகர குடியிருப்புக்கள் உருவாக்கப்பட்டமை.
- நிர்வாகமும், ஒழுங்கமைப்பும் படிப்படியாக வளர்ச்சியடைந்தமை.
- குடியிருப்புக்களின் பாதுகாப்பு தொடர்பாகக் கவனம் செலுத்தியமை.
- நிலத்தின் தன்மையை அடிப்படையாகக் கொண்டு குடியேற்றங்கள் பரவலடைந்தமை.

**(03 + 03 = 06 புள்ளிகள்)**

## 4. தேர்ச்சி மட்டம்

- அநுராதபுர காலத்தில் முன்னெடுக்கப்பட்ட நீர்ப்பாசன அமைப்பு முறைகளை அறிந்து அவை தொடர்பான தகவல்களை முன்வைப்பர்

4. (i) அநுராதபுர காலத்தில் வரண்ட வலயத்தில் கட்டப்பட்ட மூன்று பெருங்குளங்களைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(ii) வரண்ட வலயத்தில் பெருங்குளங்களை அமைத்ததற்கான இரண்டு காரணங்களைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) குளக்கட்டுகளை அமைப்பதற்கு பயன்படுத்தப்பட்ட தொழினுட்பத்தை இரண்டு உதாரணங்கள் கொண்டு விவரிக்குக. (05 புள்ளிகள்)

(iv) குளத்தின் முக்கிய பிரிவுகளான A - அலைதாங்கி, B - கலிங்கல் தொட்டி, C - மடைக்கதவு என்பன மூலம் இடம்பெறும் செயற்பாடுகளை ஒழுங்குமுறையில் விளக்குக. (06 புள்ளிகள்)

(i)
- மின்னேரியா
- கவுடுளுவாவி
- யோதவாவி
- ஹுருளுவாவி
- கந்தளாய்க்குளம்
- பதவியா
- கிரிந்தலவாவி
- கலாவாவி
- மகாவிலச்சிய
- நாச்சதுவவாவி
- மகாகணதறவாவி
- மானாகட்டியகுளம்
- மகாகல்கடவல

**(01 X 3 = 03 புள்ளிகள்)**

(ii)
- விவசாய நடவடிக்கைகளை வெற்றிகரமாக மேற்கொள்ளல்.
- வெள்ளப்பெருக்கைக் கட்டுப்படுத்தல்.
- நகர மக்களின் நீர்த்தேவையை நிறைவு செய்தல்.
- வரட்சிக்காலத்தில் நீர்த்தேவையைப் பூர்த்தி செய்தல்.
- அதிகரிக்கும் சனத்தொகைக்கு ஏற்ப உணவு உற்பத்திக்கான நீரைப் பெற்றுக் கொள்ளல்.
- மழை நீரை முறையாகச் சேமித்தல்.

**(02 X 2 = 04 புள்ளிகள்)**

(iii)
- இரு எச்சக் குன்றுகளை இணைத்து அமைக்கப்பட்டமை.
- குன்றுகள் இல்லாத இடங்களில் ஆற்று வளைவுகளை பயன்படுத்தி குளக்கட்டு அமைக்கபட்டமை உ+ம் :- யோதவாவி
- சரளை, களிமண், மண், வெண்களி ஆகியவற்றை ஓர் அடுக்கின் மேல் இன்னொரு அடுக்காக இட்டு நன்கு அமுத்தி அமைத்தல்.
- குளக்கட்டின் அத்திவாரத்தை ஆழமானதாகவும் பரப்பளவு கூடியதாகவும் அமைத்தல்.
- பாறைத் தொடர்களை அத்திவாரமாகக் கொண்டு குளக்கட்டு அமைத்தல்.
- குளக்கட்டை மிக நீளமாக அமைத்தல்.
- குளக்கட்டின் பாதுகாப்பிற்காக அலைதாங்கியை அமைத்தல்.
- நிலத்தின் தன்மையையும் சமவுயரக்கோடுகளின் பரவலையும் கவனத்தில் கொண்டு குளக்கட்டை அமைத்தல்.

**(02 + 03 = 05 புள்ளிகள்)**

(iv) **A** - அலைதாங்கி :- காற்றலைகளினால் குளக்கட்டு அரிப்படையாமல் பாதுகாத்தல்

**B** - கலிங்கல் தொட்டி :- குளத்து நீரை கால்வாய்க்கு திறந்து விடும்போது ஏற்படும் அமுக்கத்தினை குறைத்து நீரைத் திறந்து விடுதல்.

**C** - மடைக் கதவு :-
- பிரதான கால்வாய்க்கு நீரை திறந்து விடுதல்.
- குளத்தில் இருக்கும் சேற்றினை வெளியேற்ற பயன்படுத்தப்படும் (ஈரக்கலிங்கல்)

**(03 + 03 = 06 புள்ளிகள்)**

## 05. தேர்ச்சி மட்டம்



- பண்டைய சமூகத்தின் கட்டமைப்பையும் வியாபாரம் தொடர்பான சட்டங்களையும் சூழலை பாதுகாத்த முறைகளையும் பெண்களுக்கு வழங்கப்பட்ட மதிப்பு மரியாதை தொடர்பான விடங்களையும் ஆராய்வர்.

**5.** (i) இந்நாட்டின் புராதன சமுதாய கட்டமைப்பில் உச்சநிலையில் இருந்த மூன்று பிரிவினரின் பெயர்களைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(ii) புராதன காலத்தில் உள்நாட்டு வியாபாரம் தொடர்பில் விதிக்கப்பட்டிருந்த இரண்டு சட்டங்களைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) புராதன ஆட்சியாளர்கள் சூழலைப் பாதுகாப்பதற்கு மேற்கொண்ட இரண்டு நடவடிக்கைகளை விவரிக்குக. (05 புள்ளிகள்)

(iv) இந்நாட்டின் புராதன சமூகத்தில் பெண்கள் மதிப்பும் மரியாதைக்குமுரிய நிலைமையினைப் பெற்றிருந்தனர் என்பதை மூன்று உதாரணங்கள் கொண்டு விளக்குக. (06 புள்ளிகள்)

(i)
- அரசன்
- அரச அதிகாரிகள்
- பௌத்தகுருமார்கள்
- பிரபுக்கள்(வியாபாரிகள், கப்பித்தான்கள், வைத்தியர்கள், ஆசிரியர்கள்)

**(01 X 3 = 03 புள்ளிகள்)**

(ii)
- வர்த்தக நிலையத்தின் எல்லையில் வியாபாரம் செய்வோரிடம் மாத்திரம் வரி அறிடப்படல் வேண்டும்
- வர்த்தக நிலையத்தைக் கடந்து செல்லும் வண்டிகளிடமிருந்து வரி அறவிடக் கூடாது, வண்டிகளை இடைமறித்து பொருட்களை கொள்வனவு செய்யக்கூடாது.
- அதிகாரிகளிடம் காண்பிக்காது வர்த்தக நிலையங்களில் பொருட்களை விற்போரிடம் இரு மடங்கு வரி அறவிடுதல் வேண்டும்.
- வெற்றிலை, பாக்கு என்பன அதற்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் மாத்திரம் விற்பனை செய்தல் வேண்டும்.
- போயா தினங்களில் வியாபாரம் செய்தல் கூடாது.

**(01 X 4 = 04 புள்ளிகள்)**

(iii)
- உயர் நிலங்களில் உள்ள மரங்களை வெட்டுதல் கூடாது (4 ஆம் மகிந்தனின் அநுராதபுரக் கல்வெட்டு)
- காட்டு மரங்களை வெட்டக் கூடாது (3 ஆம் உதயனின் புத்தென்னெஹல கல்வெட்டு)
- மரஞ்செடிகளின் முகாமைத்துவத்தில் அரசினால் அமுல்செய்யப்பட்ட சட்டங்களைப் பின்பற்றுதல்
- உரிய காலத்தில் அறுவடை செய்தல் வேண்டும் (கொண்டவட்டுவான் தூண் கல்வெட்டு)
- சுற்றாடலில் வாழும் காட்டு விலங்குகளைப் பாதுகாப்பதற்கு சட்டங்கள் பிறப்பிக்கப்பட்டமை.
- சுற்றாடலுக்குத் தீங்கு விளைவிக்காத வகையில் கழிவுகளை அகற்றுதல்.

**(02 + 03 = 05 புள்ளிகள்)**

(iv)
- பெண்கள் அரசுரிமை பெற்றிருந்தமை
- பெண்கள் சுதந்திரமாக செயலாற்றியமை
- தாய்மையை மதித்தமை .
- கல்வி, கலைகளில் சிறந்து விளங்கிய பெண்கள் மதிக்கப்பட்டமை.
- பெண்கள் சமயப் பணிகளை மேற்கொள்வதற்கு சுதந்திரம் கிடைத்திருந்தமை.
- சாதாரண பெண்களுக்கும் சமூக தலைமைத்துவத்தில் ஈடுபட சந்தர்ப்பம் கிடைத்தமை.

**(03 + 03 = 06 புள்ளிகள்)**

**06. தேர்ச்சி மட்டம்**

- கண்டி இராச்சியத்தின் அமைவிட முக்கியத்துவம், நாயக்கவம்ச அரசர்கள், சட்டபூர்வ ஆட்சி உரிமையை நிலைநாட்ட அரசர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகள், நீதி மன்ற செயற்பாடுகள் தொடர்பான விடயங்களை ஆராய்ந்தறிவர்.

6. (i) கண்டி இராச்சியத்தின் தலைநகருக்கு இயற்கையான பாதுகாப்பு வழங்கிய
(a) நதி
(b) இரண்டு கணவாய் பாதைகளைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(ii) கண்டி இராச்சியத்தினை ஆட்சி செய்த நான்கு நாயக்கர் வம்ச மன்னர்களைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) முதலாம் விமலதர்மசூரிய மன்னன் கண்டி இராச்சியத்தின் சட்டபூர்வ ஆட்சி உரிமையை நிலைநாட்டிக் கொள்ள மேற்கொண்ட இரண்டு நடவடிக்கைகளை விவரிக்குக. (05 புள்ளிகள்)

(iv) கண்டி இராச்சியத்தின் நீதிமன்றச் செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்ட விதத்தினை மூன்று விடயங்கள் கொண்டு விளக்குக. (06 புள்ளிகள்)

(i) **(a)** மகாவலி கங்கை
**(b)** பலன, உன்னஸ்கிரிய, கலகெதர, நாலந்த (பலக்கடுவ)

**(03 புள்ளிகள்)**

(ii)
- ஸ்ரீ விஜயராஜசிங்கன்
- கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன்
- இராஜாதி இராஜ சிங்கன்
- ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன்

**(04 புள்ளிகள்)**

(iii)
- குசுமாசன தேவியை திருமணம் செய்தமை.
- உரோமன் கத்தோலிக்க சமயத்தை கைவிட்டு பௌத்த சமயத்தை தழுவிக் கொண்டமை.
- விமலதர்ம சூரியன் என்ற பௌத்த நாமத்தை சூடிக் கொண்டமை.
- சீதாவக்கையின் தெல்கமுவ விகாரையில் இருந்த புனித தந்த தாதுவை கண்டியில் பிரதிஷ்டை செய்தமை.

**(02 + 03 = 05 புள்ளிகள்)**

(iv)
- உயர் நீதி அதிகாரம் அரசனிடம் காணப்பட்டது.
- மரண தண்டனை வழங்கும் அதிகாரம் அரசனிடம் காணப்பட்டது.
- அரசனால் தீர்ப்பு வழங்க வேண்டிய வழக்குகள் (கிளர்ச்சிகள்,குழப்பங்கள் தொடர்பான வழக்குகள் சூழ்ச்சி தொடர்பான வழக்குகள் இராசத்துரோகம் தொடர்பான வழக்குகள், விகாரைகள் பிக்குகள் தொடர்பான வழக்குகள்)
- ஒவ்வொரு உத்தியோகத்தர்களுக்கும் அவரவரது பதவிக்கேற்ப நீதி அதிகாரம் வழங்கப்பட்டது.
- குற்றவாளிகளுக்குப் பல்வேறு தண்டனைகள் வழங்கப்பட்டமை.

**(03 + 03 = 06 புள்ளிகள்)**

## 07. தேர்ச்சி மட்டம்

- பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் சமூகரீதியாக ஏற்பட்ட மாற்றங்களை விபரிப்பர்.

7. (i) பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் ஆங்கிலம் கற்ற இலங்கையர்களுக்கு திறந்துவிடப்பட்ட மூன்று புதிய தொழில் வாய்ப்புகளைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)
(ii) பிரித்தானியர் ஆட்சிக்கு முன்னர் இந்நாட்டின் மக்கள் சமூகத்தில் பணத்தைப் பயன்படுத்தல் பரவலாக இல்லாதிருந்தமைக்கான இரண்டு காரணங்களை எழுதுக. (04 புள்ளிகள்)
(iii) பிரித்தானியர் ஆட்சியின் காரணமாக இந்நாட்டின் சமூகத்தில் ஏற்பட்ட இரண்டு பாதகமான தாக்கங்களை விவரிக்குக. (05 புள்ளிகள்)
(iv) பிரித்தானியர் ஆட்சியினால் இந்நாட்டுக்கு ஏற்பட்ட மூன்று நன்மையான விளைவுகளை விளக்குக. (06 புள்ளிகள்)

(i)
- எழுதுவினைஞர்
- நில அளவையாளர்
- சிவில் சேவையாளர்
- வைத்தியர்கள்
- சட்டத்தரணிகள்
- பொறியியலாளர்கள்

**(03 புள்ளிகள்)**

(ii)
- அத்தம்முறை காணப்பட்டமை.
- சுயதேவைப்பூர்த்தி பொருளாதார முறை காணப்பட்டமை.
- பண்டமாற்று முறை காணப்பட்டமை
- சமூகங்களுக்கிடையில் பரஸ்பர, சமாதான சகவாழ்வு முறையில் செயற்பாடுகள் இடம்பெற்றமை.
- சம்பளத்திற்கு வேலை செய்யும் முறை காணப்படாமை.
- கிராம சபைகளூடாக பொதுப்பணிகள் இடம்பெற்றமை.
- நில உரிமை முறையும் இராஜகாரிய முறையும் நடைமுறைப்படுத்தப்பட்டமை.

**(02 X 02 = 04 புள்ளிகள்)**

(iii)
- உள்நாட்டுக் கலாசாரம், பாரம்பரியம் சீரழிவிற்கு உட்பட்டமை.
- மதுபானப் பாவனை நாடெங்கிலும் பரவியமை
- வருமானப் பங்கீட்டில் ஏற்றத்தாழ்வு காணப்பட்டமை
- காணி உரிமையற்ற மக்கள் கூட்டம் உருவானமை.
- தன்னிறைவுப் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்ததுடன் தேசிய ரீதியிலான அறிவும் ஆற்றலும் மழுங்கடிக்கப்பட்டமை.
- மேலைத்தேய கலாசாரம் பரவியதால் உள்நாட்டு கலாசாரம் சீரழிந்தமை.
- கம்சபா எனும் பயன்மிக்க கிராம சபைகள் இல்லாதொழிந்தமை.
- மிக நீண்டகாலமாக வெளிநாட்டவர்களால் வளங்கள் சுரண்டப்பட்டமை.

**(02 + 03 = 05 புள்ளிகள்)**

(iv) - சர்வதேச மொழியான ஆங்கில மொழியறிவு நாட்டினுள் பரவியமை.

- போக்குவரத்து மற்றும் தொடர்பாடல் துறை வளர்ச்சியடைந்தமை.

- ஏற்றுமதிக்கான பெருந்தோட்டப்பயிர்களை அறிமுகம் செய்தமை .

- கைத்தொழிற் புரட்சியின் நன்மைகளை இலங்கையும் பெற்றமை.

- பாராளுமன்ற ஆட்சிமுறை அறிமுகம் செய்யப்பட்டமை.

- வெளிநாட்டு கல்வி வாய்ப்புக்கான சந்தர்ப்பங்கள் கிடைத்தமை.

- புதிய வேலை வாய்ப்புக்களுக்கான சந்தர்ப்பங்கள் கிடைத்தமை.

**(03 + 03 = 06 புள்ளிகள்)**

## பகுதி III

**08. தேர்ச்சி மட்டம்**

- அமெரிக்காவில் குடியேற்றங்களை அமைத்த நாடுகளை இனங்காண்பர்.
- அமெரிக்க, ரஷ்ய புரட்சிக்கான சுலோகங்களை முன்வைப்பர்.
- அமெரிக்க, ரஷ்ய புரட்சிக்கான காரணங்களை இனங்காண்பர்.

**8.** (i) அமெரிக்கா கண்டத்தில் குடியேற்றங்களை அமைத்த மூன்று ஐரோப்பிய நாடுகளைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(ii) (a) அமெரிக்க சுதந்திரப் போருக்கு கருப்பொருளான சுலோகம் யாது?

(b) ரஷ்ய புரட்சிக்குக் கருப்பொருளான சுலோகம் யாது? (04 புள்ளிகள்)

(iii) அமெரிக்க சுதந்திரப் போர் ஏற்படுவதற்கான இரண்டு காரணங்களை விவரிக்குக. (05 புள்ளிகள்)

(iv) ரஷ்யப் புரட்சி தோன்றுவதற்கான மூன்று காரணங்களை விளக்குக. (06 புள்ளிகள்)

(i) - போர்த்துக்கல்

- ஸ்பானியா

- ஒல்லாந்து

- பிரான்ஸ்

- இங்கிலாந்து

**(03 புள்ளிகள்)**

(ii) (a) “பிரதிநிதித்துவம் இன்றேல் வரியும் இல்லை”

(b) “உணவு, நிலம், சமாதானம்” **(02 X 02 = 04 புள்ளிகள்)**

(iii) - அமெரிக்க குடியேற்ற வாசிகள் நீண்டகாலமாகப் பிரித்தானிய தலையீட்டிற்கு மாறாக சுயநிர்வாகத்திற்கு பழக்கப்பட்டிருந்தமை.
- பிரித்தானியர் பின்பற்றிய தாய் நாட்டிற்கு சாதகமான பொருளாதாரக் கொள்கை.
- 1763க்கு பின் அமுல் செய்யப்பட்ட புதிய வரிகள் (சீனி, நாணயம், முத்திரை)
- குடியேற்ற வாசிகளின் நீதியான போராட்டங்களைக் கட்டுப்படுத்த பிரித்தானியா நடவடிக்கை எடுத்தமை.
- சுதந்திரம் தொடர்பாக குடியேற்ற வாசிகளிடையே காணப்பட்ட ஆர்வம்.
- குடியேற்ற வாசிகளின் எண்ணங்கள் மனநிலைகள், கருத்துக்களைப் பிரித்தானிய அரசாங்கம் சரியாக புரிந்துக்கொள்ளாமை.

**(02 + 03 = 05 புள்ளிகள்)**

(iv) - சார் மன்னர்களின் ஊழல் நிறைந்த ஆட்சி முறை.
- மக்களைக் கொடுமைப்படுத்தி வரி அறவிட்டமை.
- பிரபுக்களால் சாதாரண மக்கள் அனுபவித்த துன்பங்கள்.
- தொழிலாளர்கள் அனுபவித்த துன்பங்கள்.
- ரஷ்யா விவசாயிகளையும் தொழிலாளர்களையும் யுத்தத்தில் ஈடுப்படுத்தியமை.
- நாடு முழுவதும் ஏற்பட்ட உணவுப் பஞ்சமும் பொருட்களின் விலை அதிகரிப்பும்.
- நில உரிமை பிரபுக்களிடம் காணப்பட்டமை.
- திருச்சபையின் ஆதிக்கம் அதிகரித்துக் காணப்பட்டமை.
- முதலாம் உலக மகா யுத்தத்தில் ரஷ்யா பங்கெடுத்தமையால் நாட்டில் ஏற்பட்ட குழப்பகரமான நிலைமை.

**(03 + 03 = 06 புள்ளிகள்)**

**09. தேர்ச்சி மட்டம்**

- பிரித்தானியாவில் கைத்தொழில் புரட்சி தோன்றிய முக்கியத் துறைகளை பெயரிடுவர்
- கைத்தொழில் புரட்சி வேறு நாடுகளில் பரவலடைந்தமைக்கான காரணங்களை அறிவர்
- கைத்தொழில் புரட்சியினால் போக்குவரத்து துறையில் ஏற்பட்ட மாற்றங்களை விபரிப்பர்
- கைத்தொழில் புரட்சியினால் சமூகத்துறையில் ஏற்பட்ட மாற்றங்களை அறிந்துக் கொள்வர்.

**9.** (i) பிரித்தானியாவில் கைத்தொழில் புரட்சி ஆரம்பமான மூன்று முக்கிய கைத்தொழில்களின் பெயர்களை எழுதுக. (03 புள்ளிகள்)

(ii) பிரித்தானியாவில் ஆரம்பித்த கைத்தொழில் புரட்சி வேறு நாடுகளை நோக்கி பரவியமையில் செல்வாக்குச் செலுத்திய இரண்டு காரணங்களைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) கைத்தொழில் புரட்சியின் செல்வாக்குக் காரணமாக போக்குவரத்துத் துறையில் ஏற்பட்ட வளர்ச்சியினை இரண்டு உதாரணங்கள் கொண்டு விவரிக்குக. (05 புள்ளிகள்)

(iv) கைத்தொழில் புரட்சியின் விளைவாக சமூகத் துறையில் ஏற்பட்ட மாற்றங்களை மூன்று விடயங்கள் கொண்டு விளக்குக. (06 புள்ளிகள்)

(i) - நெசவு
- இரும்பு உருக்கு
- நிலக்கரி

**(03 புள்ளிகள்)**

(ii) - உலகம் முழுவதும் சனத்தொகை துரித வளர்ச்சியடைந்தமையால் பொருட்களுக்கான கேள்வி அதிகரித்தமை

- ஐரோப்பாவில் போக்குவரத்து துறையில் ஏற்பட்ட வளர்ச்சி
- பிரான்சிலும் ஜேர்மனியிலும் நிலக்கரி கண்டுப்பிடிக்கப்பட்டமை

(02 X 02 = 04 புள்ளிகள்)

(iii) - பெருந்தெருக்கள் (மெக்கடம் முறை) அமைப்பதில் புதிய முறைகள் பின்பற்றப்பட்டமை

- புகையிரதப் பாதைகள், கடல் வழி, நீர் வழி போக்குவரத்து வளர்ச்சியடைந்தமை
- நீராவியால் இயங்கக் கூடிய புகையிரத எஞ்சின் கண்டுபிடிக்கப்பட்டமை .
- டெம்லரினால் மோட்டார் வாகனம் கண்டுபிடிக்கப்பட்டமை.
- ரைட் சகோதரர்களால் ஆகாய விமானம் கண்டுபிடிக்கப்பட்டமை.

(02 + 03 = 05 புள்ளிகள்)

( iv) - நன்மையான தீமையான விளைவுகள் ஏற்பட்டமை

- துரித நகரமயமாக்கம் ஏற்பட்டமை.
- நகரமக்களின் அடிப்படை வசதிகள் அதிகரித்தமை.
- தொழிலாளர்களின் வாழ்க்கை துன்பகரமாக இருந்தமை.
- சேரிகள் உருவானமை.
- சமூக ஏற்றதாழ்வுகள் அதிகரித்தமை.
- வகுப்பு ரீதியான சமூகம் உருவாகியமை
- சமூகத்தில் பல்வேறு சீரழிவுகள் ஏற்பட்டமை.
- உழைப்பு சுரண்டப்பட்டமை.
- புதிய தொழில் வாய்ப்புக்கள் உருவானமை .
- மக்களுக்கு சாதாரண விலையில் பொருட்களை கொள்வனவு செய்ய முடிந்தமை.
- தொழிற்சங்கங்கள் தோன்றியமை.
- சமூக நலன்புரி நடவடிக்கைகளில் அரசு கவனம் செலுத்தியமை
- சூழல் மாசடைந்தமை

(03 + 03 = 06 புள்ளிகள்)

ဟဟဟဟဟဟ